# இயேசுவின் உயிர்த்தெழுதல்

**உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சரீரத்தில் நமக்குள்ள பங்கு நமது நித்திய வாழ்க்கையை உறுதி செய்கிறது.**

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் E1b பாடத்தை வாசிக்கவும்

**ஜெபம்:** "பரலோகத் தந்தையே! எங்களுக்காக மரிக்க நீர் உமது குமாரனாகிய இயேசுவை அனுப்பினீர். அவரோடு எங்களையும் எழுப்பி, அவர் மூலமாக எங்களுக்கும் புதிய வாழ்வைத் தந்த உமக்கு நன்றி. இயேசுவை மரித்தோரிடத்தில் இருந்து எழுப்பியபோது நீர் காட்டிய, உமது குமாரனின் வல்லமையையும் அதிகாரத்தையும் வெளிக்காட்டுமாறு இந்தப் பாடத்தை உபயோகப்படுத்தும்."

இயேசுவின் வாழ்வளிக்கும் உயிர்த்தெழுதலைக் கொண்டாட, **உயிர்த்தெழுந்த திருநாளுக்கு பல வாரங்களுக்கு முன்னரே ஆயத்தங்களை ஆரம்பிக்கவும்.** இயேசுவின் மரணத்தையும் மரணத்தின் மேலான வெற்றியையும் சூழ்ந்திருக்கும் நிகழ்ச்சிகளை விசுவாசிகள் அறிந்து கொள்ள ஏதுவாக சிறப்பு நிகழ்ச்சிகளைத் திட்டமிடுக.

## 1. ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் உங்கள் இருதயத்தையும் மனதையும் ஆயத்தப்படுத்துக.

- இயேசுவின் உயிர்த்தெழுதல் வரையுள்ள நிகழ்ச்சிகளை சுவிசேஷங்களில் கண்டுணர்க.

  இயேசுவின் மரணத்துக்கு முன்னுள்ள **சனிக்கிழமை,** யோவான் 12:1-11ல் காண்க.

- லாசருவின் சகோதரியான மரியாள் இயேசுவை மரணத்துக்கு ஆயத்தப்படுத்த என்ன செய்தாள்?

  உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்னுள்ள **ஞாயிற்றுக்கிழமை,** மத்.21:1-13ல் காண்க.

- வெகுநாட்களுக்கு முன் சகரியா 9 தீர்க்கத்தரிசனம் உரைத்த எதை இயேசு தமது வெற்றி பவனியில் நிறைவேற்றினார்?
- யாரை அவர் தேவாலயத்தில் இருந்து துரத்தினார்?

  உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முந்திய **திங்கட்கிழமை**யை மாற்கு 11:15-18ல் காண்க...

- மதத் தலைவர்களை, இயேசுவைக் கொல்லும்படியாக முயற்சி செய்ய வைக்கும் அளவுக்கு இயேசு என்ன செய்தார்?

  உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முந்திய **செவ்வாய்க்கிழமை**யை மாற்கு 11:27-33 ல் காண்க.

- இயேசுவின் அதிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பிய மதத்தலைவர்கள் ஏன் யோவான் ஸ்நானகனைப் பற்றிய அவரது கேள்விக்கு பதிலளிக்க மறுத்தனர்?

  ஈஸ்ட்டருக்கு முந்திய **புதன்கிழமை**யை காண்க-

- தமது கடைசி வருகையைப் பற்றி இயேசு முன்னறிவித்தது என்ன, மாற்கு 13:1-10 & 21-27.
- மாற்கு 13:10, இயேசு மகிமையோடு திரும்பி வருவதற்கு முன் சகல ஜாதிகளும் எதைக் கேட்க வேண்டும்.
- மாற்கு 13:32-33, இயேசு எப்போது மீண்டும் வருவார் என்று யார் அறிவார்?

  ஈஸ்டருக்கு முந்திய **வியாழக்கிழமை,** மாற்கு 14:12-72 ல் காண்க...


- வசனம் 1-11, இயேசுவுக்கு பதிலாக விடுவிக்கப்பட்டது யார்?
- வசனம் 12-20: இயேசுவை போர்ச் சேவகர்கள் கேலி செய்த விதங்கள்.
- வசனம் 21-39, இயேசுவை கொலை செய்யும் பொறுப்புக்கு தலைமை ஏற்றிருந்த நூற்றுக்கு அதிபதி கடைசியாக அவரைப்பற்றி என்ன கூறினான்?

- வசனம் 40-47, இயேசுவின் சரீரத்தை அவர்கள் என்ன செய்தனர்?

நன்மை செய்தவர்களையும், தீமை செய்தவர்களையும் யார் மரித்தோரில் இருந்து எழுப்புவார்? யோவான் 5:24-29 ல் காண்க.

லூக்கா 24ம் அதிகாரத்தில் காண்க:

- வாரத்தின் எந்த நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார்? (வச.1).
- இயேசு கூறிய எதை தேவ தூதன் சீஷர்களுக்கு ஞாபகப்படுத்தினான்? (2-9).
- இரண்டு பயணிகளின் இருதயம் பற்றி எரியும் படியாக உயிர்த்தெழுந்த கிறிஸ்து எதை விளக்கினார்? (10-35).
- தான் ஓர் ஆவியல்ல என்பதை இயேசு எவ்வாறு நிரூபித்தார்? (36-45).
- தமது சீஷர்கள் எதற்கு சாட்சிகளாய் இருப்பார்கள் என்று இயேசு கூறினார்? (46-48).



இயேசு எத்தனை நாட்கள் சீஷர்களுக்குக் காணப்பட்டார் என்பதை அப்.1:3ல் காண்க.

இயேசுவின சீஷர்களுக்கான இறுதி வாக்குத்தத்தத்தை அப்.1:1-9ல் காண்க.

1 கொரி.15ல் காண்க.

- இயேசு மரித்தோரில் இருந்து எழுந்திரா விட்டால் விசுவாசிகளுக்கு உள்ள நம்பிக்கை என்ன? (12-20).
- இயேசு ஏன் “கடைசி ஆதாம்” என்று அழைக்கப்படுகிறார் (21-26;45-50).
- நமது புதிய சரீரம் எவ்வழிகளில் முற்றிலும் வேறாக இருக்கும் (27-44).

பெந்தெகொஸ்தே நாளில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த போது, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பேதுரு கொடுத்த முக்கியத்துவம் என்ன?

- இயேசுவுக்காக சாட்சி கொடுத்த ஒவ்வொரு முறையும் இயேசுவின் உயிர்த்தெழுதலாகிய சத்தியத்தையே பெரிதும் அப்போஸ்தலர்கள் வலியுறுத்தினர். அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள உதாரணங்கள் 3:12-21. 4:1-3. 13:15-41. 17:2-3. 26:1-23.

## 2. ஈஸ்டருக்கு முன்பும் பின்பும் செய்ய வேண்டியவைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.

- இயேசுவின் உயிர்த்தெழுதலும் அதில் நாம் பங்கேற்பது மான சந்தோஷமான செய்தியை நண்பர்களையும் உறவினர்களையும் சந்தித்து விளக்கவும்.
- உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சந்தித்த போது எவ்வாறு தனது வாழ்க்கை மாறியது என்று அப்.22:1-22ல் பவுல் சாட்சியளித்தது போல மற்ற விசுவாசிகளும் சாட்சி பகர உதவுங்கள்.

சிறப்பு ஈஸ்டர் ஞாயிறு ஆராதனைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்.

## 3. தற்போதைய தேவைகளுக்கும் வட்டார பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற செயல் பாடுகளை தேர்ந்து கொள்க. (முறை எதுவாயிருந்தாலும் சரி)

பிள்ளைகள் தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, கேள்விகளை வழங்கலாம்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் வரையுள்ள நிகழ்ச்சிகளை மீள்பார்வை செய்யவும் (பகுதி 1).

இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய செய்திகளைக் கூறவும் அல்லது நடிக்கவும், லூக். 24 (பகுதி1). இயேசுவின் உயிர்ததெழுதல் ஏன் அதி முக்கியமானது என்பதை விளக்கவும்.

- தேவன் நமது நித்திய வாழ்க்கையை ஒரு வரலாற்று உண்மையின் மேல் ஆதாரப்படுத்தியுள்ளார். இயேசு மரித்தோரிடத்தில் இருந்து எழுந்தார். மனந்திரும்பிய தமது சரீரத்தின் அங்கமான விசுவாசிகளையும் எழுப்புவார், எபே. 2:4-6: 1கொரி. 12:27, ரோமர். 6:5-11.
- மரணத்தைப் போலவே, இயேசுவின் உயிர்த்தெழுதலும், அவரது இரட்சிப்பு தொழிலின் ஒரு பகுதியே. அவரது இரத்தம் மன்னிப்பை கொண்டு வந்தது. அவரது உயிர்த்தெழுதலும் அதில் நமது பங்கேற்பும் நித்திய வாழ்க்கையை உறுதிப்படுத்துகிறது. 1 கொரி. 15:17-26.
- மரணத்திற்குப் பின் நாம் பேய்களாகவோ அவதாரங்களாகவோ இருக்க மாட்டோம். நித்திய வாழ்விற்கு உள்ளாக எழுந்து, கிறிஸ்துவின் மகிமையான பிரசன்னத்தில் அவரை முகமுகமாய்ப் பார்ப்போம். வெளி. 22:3-5, 1யோவான் 3:2.

1 கொரி. 15 (பகுதி 1) ல் காணப்படும் மாபெரும் உண்மைகளை விவரிக்கவும்.

யோவான் 11:25 ஐ **மனனம்** செய்க.

நாம் அப்பத்தை உண்ணும்போது உயிர்த்ெழுந்த கிறிஸ்துவும் இருக்கிறார் என்பதை விளக்கி, **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்தவும்.

ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தவும், திட்டமிடவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net